# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக தொழில் பயிற்சியாளர்களை ஊக்குவித்தல்

**வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக தொழிற் பயிற்சிப் பயிலுநர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக செல்லும் தொழில் பயிலுநர்களின் பயிற்சி பாடநெறி மற்றும் பரீட்சைக் கட்டணங்களை சில நிபந்தனைகளின் அடிப்படையில் மீள் செலுத்துவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தீர்மானித்துள்ளது.**

### 1. தகுதியான பயிற்சியாளர்கள் அல்லது பணியாளர்கள்

- ஜப்பானில் வேலைவாய்ப்புக்காக செல்லும் விஷேட திறமையுடைய தொழிலாளர்கள் (Specified Skilled Workers - SSW)
- குறைந்த பட்சம் NAT-N4 அல்லது JLPT-N4 பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் தொழிநுட்ப பயிற்சியாளராக அல்லது ஜப்பானில் தொழிலுக்காக செல்லும் இளைஞர் யுவதியாக இருத்தல்
- கீழே குறிப்பிடப்படும் வேலைவாய்ப்புத்துறைகளில் தேர்ச்சி மட்டம் 4 (NVQ-IV) அல்லது அதற்கு மேலதிகமான தொழில் பயிற்சி பெற்றவர்கள்
  - விருந்தோம்பல்
  - நிதி மற்றும் சந்தைப்படுத்தல் துறை
  - தொழிநுட்பவியலாளர் துறை
  - தகவல் தொழிநுட்பத் துறை
  - கட்டுமானத் துறை
  - பராமரிப்பாளர் துறை (caregiver)

### 2. விண்ணப்பிக்கும் முறை மற்றும் சமர்ப்பிக்கத் தேவையான ஆவணங்கள்

வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக தொழிலாளராக/பயிற்சியாளராக செல்வதற்கு பணியகத்தின் பதிவைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், கீழ்வரும் ஆவணங்கள் மற்றும் தகவல்களுடன் தலைவர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு எழுத்து மூலம் கோரிக்கை ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும்.

- முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்படிவம் (www.slbfe.lk இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யலாம்)
- பணியகத்தின் பதிவைப் பெற்றுக் கொள்வதற்கு முன்வைத்த கடவுச்சீட்டின் புகைப்படம் பொறிக்கப்பட்டுள்ள பக்கத்தின் நிழற்பிரதி
- பாடநெறி மற்றும் பயிற்சிக்காக அறவிடப்படும் கட்டணங்களை செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப்பிரதி அல்லது பொருத்தமான நிறுவனத்தின் உறுதிப்படுத்தல் பிரதி
- சித்தி பெற்ற பரீட்சைகளின் சான்றிதழ்கள் (சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்) மற்றும்
- பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி விண்ணப்பதாரரின் வங்கிக் கணக்கு தொடர்பான தகவல்கள் அடங்கிய பக்கத்தின் தெளிவான நிழற் பிரதியுடன், முகாமையாளர், (பயிற்சி-தொழில் மற்றும் நிறுவனம்), இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், இல 553/1, புதிய கண்டி வீதி, தலங்கம வடக்கு, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

### 3. திருப்பிச் செலுத்தும் தொகை

தொழில் பயிற்சி மற்றும் பரீட்சைக்காக அறவிடப்படும் உண்மையான செலவில் 75% அல்லது 100,000 (ஒரு இலட்சம் ரூபா) என்ற வீதத்தில் குறைந்தளவு கட்டணம் இதன் கீழ் மீளச் செலுத்தப்படும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையின் அடிப்படையில் மீளச் செலுத்தப்படும் பயிற்சியாளர்கள்/பணியாளர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

**தலைவர்**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**
**இல: 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லை**
**தொலைபேசி இல: 1989**

**இதற்காக 2023.02.01 திகதி முதல் விண்ணப்பிக்க முடியும்.**

# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**"அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு"**

## தலைவர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,

வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக செல்லும் தொழிற்பயிற்சி பயிலுநர்கள்/ பணியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் பயிற்சி பாடநெறி மற்றும் பரீட்சைக் கட்டணங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்

**சுயவிபரம்:**

1. முழுப் பெயர்:……………………………………………………………………….
2. முகவரி:…………………………………………………………………………..
3. மின்னஞ்சல்:……………………………………………………………………
4. தொலைபேசி இல:……………………………………………………………….
5. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்த கடவுச்சீட்டு இல:……………
6. வெளிநாட்டு தொழில் / பயிற்சிக்காக செல்ல எதிர்பார்க்கும் நாடு:……………

**தொழில் பயிற்சி / தொழில் பற்றிய தகவல்கள்:**

<table>
<tr><th colspan="2">ஜப்பான் நாட்டில் பயிற்சி / தொழில் என்பவற்றிற்காக செல்பவர்கள்</th><th colspan="2">தொழில் நிமித்தம் ஜப்பான் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்குச் செல்பவர்கள்</th></tr>
<tr><th>தொழில் துறை</th><th>செலவாகிய தொகை (ரூபா)</th><th>தொழில் துறை (NVQ-IV அல்லது அதற்கு மேலதிக பரீட்சை மட்டங்களில் தேர்ச்சி)</th><th>செலவாகிய தொகை (ரூபா)</th></tr>
<tr><td rowspan="3">தொழிநுட்ப பயிற்சி பெற்றவர்கள் (TITP) (தேர்ச்சி மட்டம் NAT-N4/JLPT N4 அல்லது அதற்கு மேலதிக பரீட்சை மட்டங்களில் தேர்ச்சி)</td><td rowspan="3"></td><td>விருந்தோம்பல்</td><td></td></tr>
<tr><td>நிதி மற்றும் சந்தைப்படுத்தல</td><td></td></tr>
<tr><td>தொழிநுட்பவியலாளர்</td><td></td></tr>
<tr><td rowspan="3">விஷேட திறமையுடைய சேவையாளர்கள்</td><td rowspan="3"></td><td>பராமரிப்பாளர்கள்</td><td></td></tr>
<tr><td>தகவல் தொழிநுட்பம்</td><td></td></tr>
<tr><td>கட்டுமானம்</td><td></td></tr>
</table>

விண்ணப்பதாரியின் கையொப்பம்:……………………….  திகதி:…………………

**விண்ணப்பப்படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைக் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.**

1. சித்தி பெற்ற பரீட்சைகளின் சான்றிதழ்கள் (சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல்)
2. பரீட்சை மற்றும் பாடநெறிக் கட்டணங்களுக்காக பணம் செலுத்தப்பட்டதன் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி அல்லது பொருத்தமான நிறுவனத்தின் உறுதிப்படுத்தல் பிரதி
3. விண்ணப்பதாரரின் வங்கிக் கணக்கு தொடர்பான தகவல்கள் அடங்கிய பக்கத்தின் தெளிவான நிழற்பிரதி.